LUNE TILES®
Cool Roof Tiles
Beat the heat

# லூனி டைல்ஸ்® -ன் சிறப்புகள்

சூரிய வெப்பத்தை தடுத்து வீட்டினுள் வெப்ப சலனத்தை குறைக்க...

ECO FRIENDLY PRODUCT

100% சுற்றுப்புற சூழலின் நண்பன்

பணத்தை மிச்சப்படுத்தலாம்.

வெதரிங் கோர்ஸ் அவசியம் இல்லை

ஏ/சி யின் பயன்பாட்டை குறைத்து மின்சாரத்தை சேமிக்கலாம்.

உச்சி வெயிலிலும் லூனி டைல்ஸ் பதித்த இடத்தில் காலணிகள் இல்லாமல் நடக்கலாம்

வலிமையானது எடை குறைவானது

இது மொட்டைமாடி டைல்ஸ்
லூனி கூலிங் டைல்ஸ்®

LUNE TILES

COOL ROOF TILES www.lunetiles.com COOLING TILES

# லூனி கூலிங் டைல்ஸ்
## (Non - Ceramic) பதிக்கும் வழிமுறைகள்

## முதல் நிலை:

லூனி டைல்ஸ் பதிப்பதற்க்கு முன் மொட்டைமாடியில் பூச்சுக்காரையை தட்டி சுத்தம் செய்துவிட்டு, தண்ணிர் ஊற்றி அல்லது Air-blower மூலமாக நன்றாக சுத்தம் செய்த பிறகு வாட்டர் புரூஃப் கோட்டிங் செய்ய வேண்டும். இதற்கு வாட்டர் புரூஃப் லிக்யூட் மற்றும் கிரே சிமெண்ட்டை 1 : 1 என்ற விகிதத்தில் சரிசமமாக கலந்து பெயிண்ட் போன்று தயாரித்து அதை மொட்டைமாடியில் குறுக்கும் நெடுக்குமாக (Horizontal + Vertical) இரண்டு கோட்டிங் அடிக்க வேண்டும். அதாவது குறுக்காக முதல் கோட்டிங் அடித்து விட்டு 8 மணி நேரம் கழித்து அது காய்ந்த பின் நெடுக்காக மற்றொரு கோட்டிங் அடித்து காய விட வேண்டும். மேலும் கைப்பிடி சுவற்றில் கீழ் இருந்து 8 இன்ச் வரை பூச்சுக்காரையை கட் செய்த பிறகு இரண்டு வாட்டர் புரூஃப் கோட்டிங் அடிக்க வேண்டும். பிறகு குறைந்தது 3 முதல் 7 நாட்கள் வரை நீரை தேக்கி, நீர்கசிவு-இல்லை என்பதை உறுதி செய்த பிறகு தான் டைல்ஸ் பதிக்கும் வேலை- ஐ தொடங்க வேண்டும்.

## இரண்டாம் நிலை:

வாட்டத்திற்க்கான சுலோப்பிங் மார்க் செய்து கிரானோ தளம் (Grano Flooring) அமைக்க வேண்டும். இதற்கு 1 : 2 : 4 என்ற விகிதத்தில் அதாவது 1 பங்கு சிமெண்ட், 2 பங்கு மணல் அல்லது M-Sand, 4 பங்கு பேபி சிப்ஸ் (8 /12 mm Blue metal Chips) பயன்படுத்தி கிரானோ தளம் மூலமாக மழை நீர் வடிவதற்க்கு ஏற்றவாறு வாட்டம் அமைக்க வேண்டும். பரப்பளவிற்கு தகுந்தாற்போல ஒன்றிற்க்கு மேற்ப்பட்ட மழை நீர் வடிகால் குழாய் (Rainwater drain pipe) அமைத்து வாட்டம் அமைப்பதினால் கட்டுமான பொருள் பயன்பாட்டினை குறைத்து, 10 முதல் 15 சதவீதம் வரை பணத்தை மிச்சப்படுத்தி மேல்தளத்தின் அதிக சுமையையும் குறைக்கலாம்.

## மூன்றாம் நிலை:


கிரானோ தளத்தின் மேல் 1:8 எனும் விகிதத்தில், அதாவது 1 பங்கு கிரே சிமெண்ட், 8 பங்கு மணல் அல்லது M-Sand உபயோகித்து அடித்தளம் அமைத்து அதன் மேல் சிமெண்ட் பாலை ஊற்றி டைல்ஸ்-ன் பிடிமானத்திற்கு கீறல்கள் போட்டு குறைந்தது 8 mm ஸ்பேசர் (Spacer) பயன்படுத்தி இடைவெளி விட்டு டைல்ஸ்-ஐ மாற்று எசை-ல் ( Break Joint ) பதிக்க வேண்டும். டைல்ஸ் பதிக்கும் போது டைல்ஸ்-ன் மீது நடப்பதை தவிர்க்க, டைல்ஸ் பதிக்கும் வேலையை சுவர் ஓரங்களிலிருந்து தொடங்கி கதவு அமைந்துள்ள இடத்தில் முடியும் வண்ணம் செய்யவும். டைல்ஸ் பதிக்கும் வேலையை தோராயமாக 120 சதுர அடி முதல் 150 சதுர அடிக்கு மட்டும் கலவை-ஐ பரப்பி லூனி டைல்ஸ் பதிக்கவேண்டும். அதிக பரப்பளவில் கலவையை பரப்பி எளிதில் உலர்ந்து விட்டால் டைல்ஸ் பதிக்கும் போது பிடிமானம் கிடைக்காது, இம்முறையை தவிர்ப்பது நல்லது. மிக முக்கியமாக கிரானோ தளம், டைல்ஸ் பதிக்கும் அடித்தள கலவை, மற்றும் சிமெண்ட் பால் ஆகியவற்றில் வாட்டர் புரூஃப் லிக்யூட்-ஐ தேவையான அளவு கண்டிப்பாக சேர்த்துக்கொள்ளவேண்டும்.

## நான்காம் நிலை:

ஸ்கர்டிங்-க்கு தேவையான டைல்ஸ்-ஐ சரி பாதியாக கட்டிங் மிஷின் கொண்டு கட் செய்து கொள்ளவும், இதற்கு 1 பங்கு கிரே சிமெண்ட், 3 பங்கு மணல் அல்லது M-Sand தேவைக்கேற்ப வாட்டர் புரூஃப் லிக்யூட்-ஐ அவசியம் சேர்த்து கலவையை தயாரித்து 45 டிகிரி கோணத்தில் கைப்பிடி சுவற்றில் (Parapet wall) ஸ்கர்டிங் டைல்ஸ்-ஐ பதிக்க வேண்டும். டைல்ஸ் பதிக்கப்பட்ட மறுநாள் காலை டைல்ஸ் - களின் மீது காலணிகள் இல்லாமல் நடந்து பார்த்து, பிடிமானம் இல்லாத டைல்ஸ்-ஐ எடுத்துவிட்டு மீண்டும் சரியாக பிடிமானத்துடன் பதிக்கவேண்டும்.

## ஐந்தாம் நிலை:

டைல்ஸ்-ன் இடைவெளிக்கு 1 பங்கு ஒயிட் சிமெண்ட், 1 பங்கு கோலமாவு (White Powder), 1 பங்கு தண்ணீர் மற்றும் தேவையான அளவு வாட்டர் புரூஃப் லிக்யூட்-ஐ கண்டிப்பாக சேர்த்து கூழ் போன்ற திடத்தில் (Paint consistency) கலைவையை தயாரித்து பதிக்கப்பட்ட டைல்ஸ்-ன் இடைவெளியில் சீராக நிரப்பி, அதிகப்படியான கலவை-ஐ காட்டன் வேஸ்ட் மூலம் செய்து சுத்தம் செய்துவிடவும். தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு மேற்பரப்பு முழுவதும் காலையும், மாலையும் தண்ணீரை தெளிக்க வேண்டும்.





## லூனி டைல்ஸ் - ஐ கையாளும் முறைகள்

லூனி டைல்ஸ் - ஐ சரியான முறையில் ஒன்றன் மீது ஒன்றாக செங்குத்தாக அடுக்கி வைக்க வேண்டும். படுக்கை வாட்டத்தில் அதிகப்படியான டைல்ஸ் பாக்ஸ்- ஐ அடுக்கினால் உடையும் வாய்ப்பு உள்ளது. இம்முறையை தவிர்ப்பது நல்லது.

# லூனி செராமிக் கூலிங் டைல்ஸ்
## பதிக்கும் வழிமுறைகள்

## முதல் நிலை:

லூனி டைல்ஸ் பதிப்பதற்க்கு முன் மொட்டைமாடியில் பூச்சுக்காரையை தட்டி சுத்தம் செய்துவிட்டு, தண்ணிர் ஊற்றி அல்லது Air-blower மூலமாக நன்றாக சுத்தம் செய்த பிறகு வாட்டர் புருஃப் கோட்டிங் செய்ய வேண்டும். இதற்கு வாட்டர் புருஃப் லிக்யூட் மற்றும் கிரே சிமெண்ட்டை 1 : 1 என்ற விகிதத்தில் சரிசமமாக கலந்து பெயிண்ட் போன்று தயாரித்து அதை மொட்டைமாடியில் குறுக்கும் நெடுக்குமாக (Horizontal + Vertical) இரண்டு கோட்டிங் அடிக்க வேண்டும். அதாவது குறுக்காக முதல் கோட்டிங் அடித்து காய்ந்த பின் நெடுக்காக மற்றொரு கோட்டிங் அடித்து காய விட வேண்டும். மேலும் கைப்பிடி சுவற்றில் கீழ் இருந்து 8 இன்ச் வரை பூச்சுக்காரையை கட் செய்த பிறகு இரண்டு வாட்டர் புருஃப் கோட்டிங் அடிக்க வேண்டும். பிறகு குறைந்தது 3 நாட்கள் வரை நீரை தேக்கி, நீர்கசிவு-இல்லை என்பதை உறுதி செய்த பிறகு தான் டைல்ஸ் பதிக்கும் வேலை- ஐ தொடங்க வேண்டும்.

## இரண்டாம் நிலை:

வாட்டத்திற்க்கான சுலோப்பிங் மார்க் செய்து கிரானோ தளம் (Grano Flooring) அமைக்க வேண்டும். இதற்கு 1:2:4 என்ற விகிதத்தில் அதாவது 1 பங்கு சிமெண்ட், 2 பங்கு மணல் அல்லது M-Sand, 4 பங்கு பேபி சிப்ஸ் (8 /12 mm Blue metal Chips) பயன்படுத்தி கிரானோ தளம் மூலமாக மழை நீர் வடிவதற்க்கு ஏற்றவாறு வாட்டம் அமைக்க வேண்டும். பரப்பளவிற்கு தகுந்தாற்போல ஒன்றிற்க்கு மேற்ப்பட்ட மழை நீர் வடிகால் குழாய் (Rainwater drain pipe) அமைத்து வாட்டம் அமைப்பதினால் கட்டுமான பொருள் பயன்பாட்டினை குறைத்து, 10 முதல் 15 சதவீதம் வரை பணத்தை மிச்சப்படுத்தி மேல்தளத்தின் அதிக சுமையையும் குறைக்கலாம்.

## மூன்றாம் நிலை:



கிரானோ தளத்தின் மேல் 1:6 எனும் விகிதத்தில், அதாவது 1 பங்கு கிரே சிமெண்ட், 6 பங்கு மணல் அல்லது M-Sand உபயோகித்து அடித்தளம் அமைத்து அதன் மேல் சிமெண்ட் பாலை ஊற்றி டைல்ஸ்-ன் பிடிமானத்திற்கு கீறல்கள் போட்டு 5 mm ஸ்பேசர் (Spacer) பயன்படுத்தி இடைவெளி விட்டு டைல்ஸ்-ஐ நீரில் நனைத்து மாற்று எசை-ல் ( Break Joint ) பதிக்க வேண்டும். டைல்ஸ் பதிக்கும் போது டைல்ஸ்-ன் மீது நடப்பதை தவிர்க்க, டைல்ஸ் பதிக்கும் வேலையை சுவர் ஓரங்களிலிருந்து தொடங்கி கதவு அமைந்துள்ள இடத்தில் முடியும் வண்ணம் செய்யவும். டைல்ஸ் பதிக்கும் வேலையை தோராயமாக 120 சதுர அடி முதல் 150 சதுர அடிக்கு மட்டும் கலவை-ஐ பரப்பி லூனி டைல்ஸ் பதிக்கவேண்டும். அதிக பரப்பளவில் கலவையை பரப்பி எளிதில் உலர்ந்து விட்டால் டைல்ஸ் பதிக்கும் போது பிடிமானம் கிடைக்காது, இம்முறையை தவிர்ப்பது நல்லது. மிக முக்கியமாக கிரானோ தளம், டைல்ஸ் பதிக்கும் அடித்தள கலவை, மற்றும் சிமெண்ட் பால் ஆகியவற்றில் வாட்டர் புருஃப் லிக்யூட்-ஐ தேவையான அளவு கண்டிப்பாக சேர்த்துக்கொள்ளவேண்டும்.

## நான்காம் நிலை:

ஸ்கர்டிங்-க்கு தேவையான டைல்ஸ்-ஐ 4 அங்குல அளவிற்கு மூன்று துண்டுகளாக கட்டிங் மிஷின் கொண்டு கட் செய்து கொள்ளவும், இதற்கு 1 பங்கு கிரே சிமெண்ட், 3 பங்கு மணல் அல்லது M-Sand தேவைக்கேற்ப வாட்டர் புருஃப் லிக்யூட்-ஐ அவசியம் சேர்த்து கலவையை தயாரித்து 45 டிகிரி கோணத்தில் கைப்பிடி சுவற்றில் (Parapet wall) ஸ்கர்டிங் டைல்ஸ்-ஐ பதிக்க வேண்டும். டைல்ஸ் பதிக்கப்பட்ட மறுநாள் காலை டைல்ஸ் - களின் மீது காலணிகள் இல்லாமல் நடந்து பார்த்து, பிடிமானம் இல்லாத டைல்ஸ்-ஐ எடுத்துவிட்டு மீண்டும் சரியாக பிடிமானத்துடன் பதிக்கவேண்டும்.

## ஐந்தாம் நிலை:

டைல்ஸ்-ன் இடைவெளிக்கு Sanded Grout - ஐ கூழ் போன்ற பதத்தில் பதிக்கப்பட்ட டைல்ஸ்-ன் இடைவெளியில் சீராக நிரப்பி, அதிகப்படியான கலவை-ஐ காட்டன் வேஸ்ட் மூலம் செய்து சுத்தம் செய்துவிடவும். தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு மேற்பரப்பு முழுவதும் காலையும், மாலையும் தண்ணீரை தெளிக்க வேண்டும்.


## லூனி செராமிக் டைல்ஸ் - ஐ கையாளும் முறைகள்

லூனி டைல்ஸ் - ஐ சரியான முறையில் ஒன்றன் மீது ஒன்றாக செங்குத்தாக அடுக்கி வைக்க வேண்டும். படுக்கை வாட்டத்தில் அதிகப்படியான டைல்ஸ் பாக்ஸ்- ஐ அடுக்கினால் உடையும் வாய்ப்பு உள்ளது. இம்முறையை தவிர்ப்பது நல்லது.